www.freetnbooks.com

வகுப்பு :10

தேர்வு எண் | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு, 2025 - 26

நேரம் : 3.00 மணி]

## சமூக அறிவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I

**I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக.** 14x1=14

1. திருச்சிராப்பள்ளி பேரறிக்கையை வெளியிட்டவர் யார்?
   அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர் இ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஈ) கோபாலநாயக்கர்
2. நிலம் கடவுளுக்குச் சொந்தம் என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரி விதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர் யார்?
   அ) டிடுமீர் ஆ) சித்து இ) டுடுமியான் ஈ) ஷரியத்துல்லா
3. கூற்று : காங்கிரஸ் முதலாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டது.
   காரணம் : காங்கிரஸ் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள காந்தி – இர்வின் ஒப்பந்தம் வழிவகை செய்தது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை
   ஆ) கூற்று சரியானது ஆனால் காரணமும் தவறானது
   இ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது
   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
4. தமிழ் இசை வரலாறு குறித்த நூல் யாரால் வெளியிடப்பட்டது.
   அ) ஆபிரகாம் பண்டிதர் ஆ) சாமிநாதர் இ) மறைமலை அடிகள் ஈ) சுப்ரமணிய பாரதி
5. ---------- உலகின் கூரை என அழைக்கப்படுகிறது.
   அ) பாமீர் முடிச்சு ஆ) $K_2$ இ) ஆனைமுடி ஈ) எவரெஸ்ட்
6. உலகிலேயே மிக நீளமான அணை ----------
   அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை
7. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் ------
   அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புதுடெல்லி ஈ) ஹைதராபாத்
8. கூற்று : நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள் தொகை கொண்ட மாவட்டம்.
   காரணம் : இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது.
   அ) கூற்று, மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது
   ஆ) கூற்று, மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
   இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி
9. நமது அடிப்படைக் கடமைகள் ------ இடமிருந்து பெற்றோம்
   அ) அமெரிக்கா அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
   இ) ரஷ்யா அரசியலமைப்பு ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு
10. சட்ட மேலவை என்பது ---------
    அ) 5 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது ஆ) 6 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது
    இ) நிரந்தர அவை ஆகும் ஈ) 4 ஆண்டுகள் பதவிகாலம் கொண்டது
11. சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்.
    அ) மவுண்ட்பேட்டன் பிரபு ஆ) சர்சிரில் ராட்க்ளிஃப்
    இ) கிளமண்ட் அட்லி ஈ) மேற்கூறிய ஒருவருமில்லை
12. 1632 இல் ஆங்கிலேயர்களுக்கு கோல்டன் ஃபயர்மேன் வழங்கியவர் யார்?
    அ) ஜஹாங்கீர் ஆ) கோல்கொண்டா சுல்தான் இ) அக்பர் ஈ) ஔரங்கசீப்
13. இந்தியாவில் வருமான வரிச்சட்டம் முதன்முதலில் ------- ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.
    அ) 1860 ஆ) 1870 இ) 1880 ஈ) 1850
14. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக்கொண்ட ஒரே மாநிலம் ---------
    அ) கேரளா ஆ) ஆந்திர பிரதேசம் இ) தமிழ்நாடு ஈ) கர்நாடகா

பகுதி – II

**II. ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்.**
**கேள்வி எண். 28 கட்டாயம் விடையளிக்க வேண்டும்.** 10x2=20

15. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒருகுறிப்பு வரைக.
16. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?
17. ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
18. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

19. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.
20. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
21. தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.
22. பறக்கும் தொடருந்து திட்டம் (MRTS) என்றால் என்ன?
23. செம்மொழித் தகுதிப் பெற்ற இந்திய மொழிகள் எவை?
24. பஞ்சசீலக் கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.
25. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்துத் திட்டம் பற்றி நீவிர் அறிவது யாது?
26. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.
27. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.
28. ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் பற்றி எழுதுக.

## பகுதி – III

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.42–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **10x5=50**

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
   i) ------ பூலித்தேவரின் படைப் பிரிவுகளில் ஒன்றனுக்கு தலைமை ஏற்றிருந்தார்.
   ii) 1578 ல் ------- எனும் தமிழ்ப் புத்தகம் கோவாவில் வெளியிடப்பட்டது.
   iii) தமிழ்நாட்டில் மிக அதிக மழைபெறும் பகுதி -------
   iv) பஞ்சசீலக் கொள்கை -------- மற்றும் ---------- நாடுகளுக்கிடையே கையெழுத்தானது.
   v) --------- ன் மற்றொரு பெயர் "குட்டி ஜப்பான்" என்ற அழைக்கப்படுகிறது.
30. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
31. 1857–ஆம் ஆண்டின் பெரும் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.
32. அ) **வேறுபடுத்துக.**
   i) புதுப்பிக்க இயலும் வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.
   ii) உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்.

   ஆ) **காரணம் கூறு.**
   தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிகக் குறைந்த மழையைப் பெறுகிறது.
33. தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.
34. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
35. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.
36. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
37. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
38. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
39. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
40. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கியப் பண்புகள் யாவை?
41. 1920 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட இந்திய வரலாற்று நிகழ்வுகளை ஏதேனும் ஐந்தினை காலக்கோடு வரைக.
42. <u>இந்திய வரைபடத்தில்</u> **பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.**
   **(i)** பராக்பூர் **(ii)** தண்டி **(iii)** மீரட் **(iv)** ஜாலியன்வாலாபாக் **(v)** சௌரி சௌரா

## பகுதி – IV

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2x8=16**

43. அ) பெண்களின் மேம்பாட்டிற்கு 19ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக. **(அல்லது)**

   ஆ) தென்மேற்குப் பருவக்காற்று குறித்து எழுதுக.
44. அ) **கொடுக்கப்பட்டுள்ள <u>இந்திய வரைபடத்தில்</u> கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
   i) ஆரவல்லி மலைத்தொடர் ii) ஆனைமுடி
   iii) தக்காண பீடபூமி iv) கங்கை ஆறு
   v) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை vi) அகஸ்திய மலை உயிர்க்கோள பெட்டகம்
   vii) ஹிராகுட் அணை viii) பாலை மண் பகுதி

   **(அல்லது)**

   ஆ) **கொடுக்கப்பட்டுள்ள <u>தமிழ்நாடு வரைபடத்தில்</u> கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
   i) காவிரி ஆறு ii) நீலகிரி
   iii) மேட்டூர் அணை iv) கோடியக்கரை
   v) சர்வதேச விமானநிலையம் (ஏதேனும் ஒன்று) vi) கரும்பு விளையும் பகுதி
   vii) பழவேற்காடு ஏரி viii) நிலக்கரி கிடைக்குமிடம் (ஏதேனும் ஒன்று)



www.freetnbooks.com | FREETNBOOKS